## இலங்கை வைப்புக்கள் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்ம் 2013

இலங்கை மத்திய வங்கியால் முகாமைசெய்யப்பட்ட இலங்கை வைப்புக்கள் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு, 2010 செப்தெம்பர் 28 ஆந்திகதிய 1673/11 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை வைப்புக்கள் காப்றுதி திட்ட பிரமாணங்களின் 10.3 ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை

வடிவமைக்கும் வகையில் இலங்கை வைப்புக்கள் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி இலங்கை வைப்புக்கள் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 இலங்கை வைப்புக்கள் காப்புறுதி திட்டத்தின் குறிக்கோள்கள்

நாணயச்சட்ட அதிகாரச்சட்டத்தின் (அத்தியாயம் (422) 32 உ பிரிவின் கீழ் நாணயச் சபையின் தலைவரால் 2010 செப்தெம்பர் 28 ஆந்திகதிய 1673/11 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்தமானியில் வெளியிடப்பட்ட பிரமாணங்களின் கீழ் இலங்கை வைப்புக்கள் காப்புறுதி திட்டம் தாபிக்கப்பட்டது. இலங்கை வைப்புக்கள் காப்புறுதி திட்டம் நாட்டின் ஒட்டு மொத்த நிதி ஸ்திரத்தன்மையின் அக்கறையில் அமுலாக்கப்படுகின்றது மற்றும் இது தொடக்கத்தில் நிதி நிறுவனங்கள் நட்டமடைவதிலிருந்து சிறு வைப்பாளர்களை பாதுகாப்பதற்கான பொறிமுறையொன்றை உருவாக்கி, அதன்மூலம் சிறு வைப்பாளர்களின் நம்பிக்கையைப் பேணுவதன் மூலம் நிதி நிறுவனங்களின் ஸ்திரத்தன்மை மேம்படுத்துகின்றதுடன் இலங்கை வைப்புக்கள் காப்புறுதி திட்டம் 2010 ஒத்தோபர் 01 இலிருந்து அதன் செயற்பாடுகளை தொடங்கியிருந்தது. இலங்கை வைப்புக்கள் காப்புறுதி திட்டமானது நிதி முறைமைகளில் பொது மக்கள் நம்பிக்கையயை உயர்த்துவதற்கும் நாட்டின் ஒட்டுமொத்த நிதி ஸ்திரத்தன்மைய வலுப்படுத்துவதற்கும் அவற்றினால் திரவத்தன்னை ஆதரவை வெளிப்படுத்துவதற்கு 2013 நவம்பர் 22 இல் இலிருந்து “இலங்கை வைப்புக்கள் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டம்” என பெயர் மாற்றப்பட்டது. நாணயச் சபையால் செயற்படுத்தப்பட்டு முகாமை செய்யப்பட்டு வருகின்ற இலங்கை வைப்புக்கள் காப்புறுதி திட்டம் மேற்குறிப்பிட்ட பிரமாணங்களின் 7.1 ஆம் பந்தியின்படி தாபிக்கப்பட்டிருந்தது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை வைப்புக்கள் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டின் அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 3. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான இலங்கை வைப்புக்கள் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டின் ரூபா 4.29 பில்லியன் நேரொத்த மிகையுடன் ஒப்பிடும் போது ரூபா 5.30 பில்லியன் வரிக்கு முந்திய விளைவித்திருந்தமையால், ரூபா 1.01 பில்லியன் அல்லது 23 சதவீதத்தால் மிகையில் அதிகரிப்பைக் காட்டுகின்றது.

### 3.2 நிதிய நிலைமை

இலங்கை வைப்புக்கள் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் நிதி நிலைமைக் கூற்றின்படி, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை வைப்புக்கள் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவு நிதியம் முன்னைய ஆண்டின் இறுதியிலுள்ளவற்றுடன் ஒப்பிடும் போது ரூபா 5.01 பில்லியன் அல்லது 67 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

### 3.3 செயற்பாட்டு மீளாய்வு

#### 3.3.1 வருமான வரி தண்ணடப்பணம்

திட்டமானது 2010 ஒத்தோபர் 01 இலிருந்து 2011 திசெம்பர் 31 வரையான காலத்திற்காக வருமானவரிக் கொடுப்பனவிலுள்ள தாமதம் காரணமாக தண்டப்பணமாக ரூபா 110,348,442 தொகை சாட்டுதல் செய்திருந்தது. திட்டத்தின் தொடக்கத்திலிருந்து உள்ளவாறான இலங்கை வைப்புக்கள் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவு திட்டத்துடன் தொடர்புபட்ட வரிப்பிரமாணங்களில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடமிருந்து சான்றுபடுத்தல்களை திட்டமானது பெற்றது என இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் தெரிவித்திருந்தார். வரி விலக்கு 2013 ஏப்ரல் 01 இலிருந்து வழங்கப்பட்டிருந்ததுடன் 2010 ஒத்தோபர் 01 இலிருந்து 2011 திசெம்பர் 31 வரையான

காலத்திற்காக தண்டப்பணத்துடன் சேர்து வரி மதிப்பீடொன்று விதிக்கப்பட்டிருந்தது.

### 3.3.2 காசுப்பய்ச்சல்

இலங்கை வைப்புக்கள் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவு திட்டத்தின் காசுப்பய்ச்சல் கூற்றின் படி, காசு உட்பாய்ச்சல் மற்றும் காசு வெளிப்பாய்ச்சலாக தனித்தனியாக வெளிப்படுத்துவதற்கு பதிலாக முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சலாக காட்டப்பட்டிருந்தது.